1982 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே நிலத்தில் நாம் செய்கின்ற வேளாண்மையை முறையாக ஒழுங்காக செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்தநற்குப் பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர் ஆராய்ச்சிக்கு ரூபாய் ஒதுக்கு வதற்கு அரசு ஆவன செய்யுமா? ஸ்வீடன் நாட்டில் சோஷியல் பாரஸ்டிற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. ஸ்வீடன் நாட்டிலே உள்ளதையெல்லாம் சொல்ல ஆரம்பிக்க வேண்டாம்.

திரு. இரா. தாமரைக்கனி : அதற்காகப் பணம் 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அந்த ஆராய்ச்சிப் பணிக்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்கு வருட காலத்திற்கு 114·13 லட்சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உள்ளாட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கும் திட்டம்.

*வினா எண் 428—திரு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள்ளாட்சியின்கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றியங்களின் ஆசிரியர்கள் 1 6-1981 முதல் அரசு ஊழியர்களாகி விட்டார்கள். மாநகராட்சிகளின் ஆசிரியர்கள் குறித்து கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. நகராட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1982 மார்ச் 9

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாநகராட்சி ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை வரவில்லை என்று குறிப்பிடப் பட்டது. அவர்களையும் அரசு ஊழியர்களாக்குவதற்கு ஏற் பாடு செய்யப்படுமா? ஏற்கெனவே அரசு ஊழியர்களாக ஆக்கப் பட்டுள்ள ஆசிரியர்களுக்கு நேரடியாக செக் மூலம் சம்பளம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாநகராட்சி ஆசிரியர் கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வரவில்லை. கொடுக்கின்ற சம்பளத்தை செக் மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பல்வேறு முறைகளில் செக்காக வழங்குகிறோம் என்று சொன்னாலும், கேஷாக வழங்கு கிறோம் என்று சொன்னாலும் அல்லது அவர்களுடைய அக்கவுண் டிலேயே போடுகிறோம் என்று சொன்னாலும் ஒரு சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள், ஒரு சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படிப் பட்ட நிலையில் செக் மூலமாக கொடுக்கலாம் என்று உத்திர விடப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஊராட்சி ஒன்றியங்களிலே கல்வி அலுவலர்கள் போதுமான அளவில் இல்லை என்று சொல்லப் படுகிறது. அவர்களுக்கு வேண்டிய கிளார்க், டைப்பிஸ்ட் போன்றவர்கள் இல்லாத காரணத்தினால் உடனடியாக அவர் களைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆசிரியர்கள் சம்பந் தப்பட்ட கேள்வி. டைப்பிஸ்டைப் பற்றியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றி யங்களிலே உள்ள ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிவிட்ட காரணத்தினால் அங்கே இருக்கின்ற ஸ்டாஃபுக்கு நிறைய வேலை வந்திருக்கிறது. அதனால் தான் அந்தக் கேள்வியைக் கேட்டிருக் கிறார்கள்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்பொழுது 1-6-81-க்குப் பிறகு உதவி கல்லூரி அலுவலர்கள் அத்தனை பேர்களும் இப்பொழுது கல்வித் துறையிலே பணி புரிந்து வருகிறார்கள். ஆகவே, தட்டெழுத்தர் போன்ற பதவி களெல்லாம் அதிலேதான் நிரப்பப்படுகின்றனவே ஒழிய ஊராட்சி ஒன்றியங்களில் அல்ல.

1982 மார்ச் 9]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மாநகராட்சியிலுள்ள ஆசிரியர்கள் தங்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை வரவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நகராட்சியின் கீழ் உள்ள ஆசிரியர்கள் பற்றிப் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எவ்வளவு காலத்தில் அந்தப் பரிசீலனை முடிக்கப்படும்? அந்த ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்கும் வகையில் துரிதமாக அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கான ஏற்பாடுகள் நடக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாநகராட்சி ஆசிரியர்கள் எந்தக் கோரிக்கையையும் அனுப்பவில்லை. அவர்கள் அப்படி அனுப்பாததற்கு முக்கியமான காரணம் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கும் நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், ஒரு மாநகராட்சியில் பணி புரிகின்றவர்கள் நாளைக்கு அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டால் ஒரு மாநகராட்சியிலிருந்து இன்னொரு மாநகராட்சிக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். அதன் காரணமாக இப்படிப்பட்ட கோரிக்கைகளை எழுப்பவில்லை. ஆனால் நகராட்சி ஆசிரியர்கள் தங்களையும் எப்படி ஊராட்சி ஒன்றியங்களுடைய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்களோ அதைப் போல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருப்பதற்குக் காரணம் 1-6-81 லேயிருந்து ஊராட்சி ஒன்றியங்களினுடைய ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டார்கள், அதன் விளைவு எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு அது நல்லபடியாக திருப்திகரமாக இருக்கிறதா என்று பார்த்து இவர்களையும் அவ்வாறு செய்யலாமா வேண்டாமா என்பது பற்றி அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூனியன் ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக மாற்றியதற்குப் பிறகு அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய சாமான்கள், ஸ்டேஷனரி, சாக்பீஸ், டிரஷரிக்குச் சென்றால் அதற்கான செலவுத் தொகை போன்றவை கொடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால் அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே அது எனக்குத் தெரியாது. ஏனென்றால் இப்பொழுது கல்வித் துறையே நேரடிக் கவனம் எடுத்திருப்பதால் அப்படிப்பட்ட குறைபாடுகள் எங்களுடைய துறைக்கு வரவில்லை.